கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 12ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.13/2026
இன்
அசல் வழக்கு எண்.121/2006
* * * *

1) சோனைத்தேவர்(இறப்பு)
2) ராமு
3) நடராஜன்
4) ஈஸ்வரன் (இறப்பு)
5) சோனை
6) செல்வம்
7) ஆனந்த்
8) லீலாவதி
9) விக்னேஷ்வரன்
10) நந்தினி பாரதி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1) பிச்சைத்தேவர்(இறப்பு)
2) அழகு (இறப்பு)
3) முருகேசன்
4) இருளப்பன்
5) மீனாட்சி
6) கட்சம்மாள்
7) பஞ்சவர்ணம்
8) போதும்பொண்ணு ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இறுதியாக இம்மனு 10.02.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது 2, 3, 5 முதல் 7 வரையிலான மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.A.லாவண்யா அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.K.இப்ராகிம் அவர்கள் ஆஜராகியும், 1, 4 மனுதாரர்கள் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, கள்ளிக்குடி, நத்தம், குராயூர் I பிட் வருவாய் கிராம அலுவலகத்தில் உள்ள நத்தம் 'A' பதிவேடு நகல் S.No.214/22 அதன் அடங்கல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அதன் வருவாய்துறை அதிகாரி சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 6, 7 மற்றும் பிரிவு 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்கள் வழக்கை தாமதப்படுத்தும் நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள விவரங்கள்

சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

5. அசல் வழக்கானது கடந்த 2006 முதல் கடந்த 20 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், இம்மனுவானது மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, கள்ளிக்குடி, நத்தம், குராயூர் I பிட் வருவாய் கிராம அலுவலகத்தில் உள்ள நத்தம் 'A' பதிவேடு நகல் S.No.214/22 அதன் அடங்கல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வருவாய்துறை அதிகாரி சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்நிலையில், நத்தம், குராயூர் I பிட் வருவாய் கிராம அலுவலகத்தில் 'A' பதிவேடு நகல் S.No.214/22 மற்றும் அதன் அடங்கல் ஆவணங்கள் கேட்டு உரிய அலுவலகத்தில் மனு தாக்கல் செய்ததாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் பொறுத்து உரிய அலுவலகத்தில் பெற சட்டப்படியான நடவடிக்கை விதி 75 உரிமையியல் நடைமுறை விதியின் கீழ் எடுத்ததாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யும்விதமாக சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7. மேலும், மேற்படி ஆவணங்களை மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, கள்ளிக்குடி, நத்தம், குராயூர் I பிட் கிராம வருவாய்துறை அதிகாரி கொண்டு வந்து சாட்சியம் அளிக்க வேண்டும் என்று மனுவில் கூறியுள்ளப்படி, மேற்படி, நத்தம், குராயூர் I பிட் வருவாய் கிராம வருவாய்துறை அதிகாரி சாட்சியம் அளிக்க வேண்டும் என்பது சட்டப்படியானது என்பதை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர் தரப்பில் மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி, ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்பது சட்டப்படியானது என்பதை மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதாலும், அசல் வழக்கானது 2006ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவானது அசல் வழக்கின்

காலதாமதத்தை ஏற்படுத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.12 15:52:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.12 15:52:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 13 /2026
அசல் வழக்கு எண்.121/2006
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 12.02.2026